இலங்கை சனநாயக ஷோசலிசக் குடியரசு

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 318

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு

மூன்றாவது அறிக்கை

(2025.04.02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட விசாரணை)

வெளிநாட்டு பணவனுப்பல்களின் பிரகாரம் வெளிநாடுகளில் பணி புரிகின்ற இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்யும் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்குரியதாக 2022 மே மாதம் 01ஆந் திகதி முதல் 2023 செத்தெம்பர் 15ஆந் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட உத்தேசத் திட்டம் தொடர்பாக அரசாங்க நிதி பற்றிய குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ கபீர் ஹசீம் அவர்களால்

2025 ஒக்டோபர் மாதம் 24 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

2025 ஒக்டோபர் மாதம் 24 ஆந் திகதி இலங்கை பாராளுமன்றத்தால் அச்சிடப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டது.

பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கை தொடர்பான அவதானிப்புகள் மற்றும் முன்னெடுப்புகள் பற்றிய அறிக்கை

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 (4) இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது :-

"அரசாங்கக்க கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புக்களையும் அது தொடர்பில் எடுத்த நடவடிக்கைகையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் குறித்த அவதானிப்புக்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச்சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால் அவர் அதற்கான காரணங்களையும் அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகளையும் எழுத்துமூலம் தெளிவுபடுத்த வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில், அவ்வறிக்கையை சட்டமா அதிபரின் அவதானிப்புகள் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கலாம்."

<u>பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின்</u>

<u>அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அமைப்பு</u>

1. கௌரவ கபீர் ஹஷீம் (2025.03.21ஆந் திகதியிலிருந்து) (தவிசாளர்- 2025.09.12 ஆந் திகதியிலிருந்து)
2. கௌரவ என்டன் ஜயகொடி
3. கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) அருண ஜயசேகர
4. கௌரவ சுகத் திலகரத்ன
5. கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப் (2025.03.21ஆந் திகதி தொடக்கம்)
6. கௌரவ நலின் ஹேவகே
7. கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் (2025.03.21ஆந் திகதி தொடக்கம்)
8. கௌரவ ரோஹித அபேகுணவர்தன (2025.03.21ஆந் திகதி தொடக்கம்)
9. கௌரவ ஜே.சீ. அலவத்துவல (2025.03.21ஆந் திகதி தொடக்கம்)
10. கௌரவ சாமர சம்பத் தசனாயக (2025.03.21ஆந் திகதி தொடக்கம்)
11. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி (2025.03.21ஆந் திகதி தொடக்கம்)
12. கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன (2025.03.21ஆந் திகதி தொடக்கம்)
13. கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன் (2025.03.21ஆந் திகதி தொடக்கம்)
14. கௌரவ சட்டத்தரணி (திருமதி) சாகரிகா அதாவுத
15. கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி
16. கௌரவ கே. இளங்குமரன்

17. கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா
18. கௌரவ அஜந்த கம்மெத்தெகே (2025.03.21ஆந் திகதி தொடக்கம்)
19. கௌரவ ருவன்திலக்க ஜயகொடி
20. கௌரவ சட்டத்தரணி (திருமதி) துஷாரி ஜயசிங்ஹ (2025.03.21ஆந் திகதி தொடக்கம்)
21. கௌரவ ரீ.கே. ஜயசுந்தர (2025.03.21ஆந் திகதி தொடக்கம்)
22. கௌரவ எம்.ஏ.எம். தாஹிர் (2025.03.21ஆந் திகதி தொடக்கம்)
23. கௌரவ சுசந்த குமார நவரத்ன
24. கௌரவ லால் பிரேமநாத்
25. கௌரவ சானக மாதுகொட (2025.03.21ஆந் திகதி தொடக்கம்)
26. கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க
27. கௌரவ சந்தன சூரிய ஆரச்சி
28. கௌரவ அரவிந்த செனரத்
29. கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன
30. கௌரவ சுனில் ரத்னசிரி (2025.05.08ஆந் திகதி தொடக்கம்)

குழுச் செயலகத்தின் பணியாளர்கள்

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தற்போதைய பணியாளர்கள்:

- திருமதி. காந்தி பீரிஸ் - குழுவின் செயலாளர் / உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)
- திரு. சனத் விஜேகுணவர்தன - பிரதான உத்தியோகத்தர்
- திருமதி.ஆர்.ஏ.டி.என்.கியோவனி - பிரதிப் பிரதான உத்தியோகத்தர்
- திரு. ஜே.ரீ.எல்.பி. சமீர - உதவிப் பிரதான உத்தியோகத்தர்
- செல்வி.ஜி.டீ.ஜே.எச்.அயேஷ்மன்தி – பாராளுமன்ற உத்தியோகத்தர்
- திருமதி.ஜி.எம். கல்லேகொட – பாராளுமன்ற உத்தியோகத்தர்

குழு அறிக்கைகள்

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கைகளை www.parliament.lk எனும் பாராளுமன்ற இணையத்தளம் மூலமாகப் பின்வரும் படிமுறைகளில் பதிவிறக்கம் செய்ய முடியும்.

Select language → Business of Parliament → Committees → Committee Reports → Select Legislature (10th Parliament) → Select Session (1st Session) → Select Committee Type (Comittees for Special Purposes) → Select Committee (Committee on Public Accounts) → Search

விசாரணையுடன் தொடர்புடைய கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கை

2024ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட "வெளிநாட்டு பணவனுப்பல்களின் பிரகாரம் வெளிநாடுகளில் பணி புரிகின்ற இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்யும் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்குரியதாக 2022 மே மாதம் 01ஆந் திகதி முதல் 2023 செத்தெம்பர் 15ஆந் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட உத்தேசத் திட்டம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை" www.auditorgeneral.gov.lk என்ற இணையதளத்தில் பின்வரும் இணைப்பு ஊடாக பதிவிறக்கம் செய்யலாம்.

http://www.auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2024/special/Fully_Electric_vehicle/Fully-Electric-vehicle-Full-Document-2024.09.05.pdf

இவ்விசாரணைக்காக மேற்குறிப்பிட்ட கணக்காய்வு அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டதுடன் குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய மேலதிகத் தகவல்கள் அக்கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உள்ளடக்கம்

தவிசாளரின் குறிப்பு 8

சுருக்க அறிக்கை...11

பின்னணி 13

விசாரணையின் போது இனங்கண்ட சிக்கல்கள் மற்றும் அவதானிப்புகள் 16

மீளாய்வு...27

குழுவின் பரிந்துரைகள்..29

இணைப்புக்கள் 32

தவிசாளரின் குறிப்பு

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரின்போது அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவால் வெளிநாட்டு பணவனுப்பல்களின் அடிப்படையில் வெளிநாடுகளில் பணிபுரிகின்ற இலங்கையர்களுக்கு முழுமையான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்குரியதாக 2022 மே மாதம் 01ஆந் திகதி முதல் 2023 செத்தெம்பர் மாதம் 15ஆந் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட உத்தேசத் திட்டம் தொடர்பாக 2025.04.02ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட விசாரணை உள்ளடங்கலான குழுவின் மூன்றாவது அறிக்கையை பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 119(3)இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நான் இன்றைய தினம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறேன்.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148ஆவது பிரிவால், இலங்கைப் பாராளுமன்றத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பகிரங்க நிதி மீதான கட்டுப்பாடு மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளை மூலம் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக நிதி மேற்பார்வைக் குழுவாகக் கருதப்படும் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு, பொது மக்களின் செலவுக்காக பாராளுமன்றத்தால் வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டை காட்டும் கணக்குகள், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுக்கு பொருத்தமானதென கருதப்படக் கூடிய வேறு ஏதேனும் கணக்குகளை ஆராய்வது இக்குழுவின் முதன்மைப் பணியாகும்.

அப்பணியை நிறைவேற்றும்போது கணக்காய்வு எனும் பிந்தைய செயன்முறையால் குழுவுக்கு கிடைக்கப் பெறும் பங்களிப்பு அளப்பரியதாகும். சரியான கணக்காய்வின்போது

இனங்காணப்பட்ட பலவீனங்களுக்கான தீர்வுகளை வழங்குவதுடன், எதிர்காலத்தில் வினைத்திறனின்மையை முனைப்புடன் தடுப்பதற்காக கடந்த காலத்தில் இடம்பெற்ற குறைபாடுகளை தவிர்க்கும் வகையில் நிறுவனங்களுக்கான வழிகாட்டுதலும் அதனூடாக நிகழும்.

நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டு, சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்காக கட்சி பேதமின்றி முன்பைவிட அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அரசியல்வாதிகளின் கடமையாகும் எனவும், அரச நிறுவனங்களில் இடம்பெறும் நிதி மோசடிகள் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது சகல அரச ஊழியர்களினதும் கடமையாகும் எனவும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர் என்ற வகையில் நான் அதனை வலியுறுத்த விரும்புகிறேன்.

அவ்வாறே, அரச நிறுவனங்களின் நிதிசார் ஒழுக்கத்தையும், செயலாற்றுகையையும் மேம்படுத்துவதற்காக குழுவால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அர்த்தமற்றதாகி போய்விடாமல் பார்த்துக் கொள்வது அரசியல்வாதிகளினதும், பிரதம கணக்கீட்டு அலுவலரினதும் பொறுப்பாகுமென்பதை இதன்போது விசேடமாகக் குறிப்பிட வேண்டும். குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த துரிதமாக கவனத்தைச் செலுத்தல், பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் சகல செயற்பாடுகள் தொடர்பாகவும் பின்னாய்வுகளை மேற்கொண்டு உரிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டியது பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகுமென்பதுடன் அதற்கப்பால் இடம்பெறும் குற்றவியல் தவறுகளுக்காக சட்டத்துறை தலைமையதிபதியின் தலையீட்டுடன் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அரசியல்வாதிகளின் கடமையாகும்.

ஆதலால், இவ்வறிக்கையை பாராளுமன்றத்தின் பொருத்தமான பிரேரணை நிறைவேற்றல் ஊடாக தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தவதற்கு அரசாங்க கணக்குகள் பற்றிய குழு எதிர்பார்கின்றது.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் வெற்றி என்பதன் பொருளாவது இதனுடன் தொடர்புடைய சகல தரப்பினரதும் ஒத்துழைப்பின் பெறுபேறு என்பதே ஆகும். ஆதலால் அரச நிதி பொறிமுறையை வலுவூட்டுவதற்கு அரசாங்க நிதி பற்றிய குழுவால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கடந்த காலங்களில் அரசாங்க நிதி பற்றிய குழுவில் சேவையாற்றிய தவிசாளர்களுக்கும், அங்கத்தவ உறுப்பினர்களுக்கும், குழுப்பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு கட்சிபேதமின்றி எனக்கு முழுமையான ஒத்துழைப்பை நல்கி வரும் தற்போதைய அங்கத்துவ உறுப்பினர்களுக்கும் எனது நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலும், பல்வேறு சவால்களுக்கு மத்தியில் குழுவின் பணிகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு வழங்கும் ஒத்துழைப்புக்காக கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் அவருடைய பணியாட்டொகுதிக்கும், பொதுத் திறைசேறியின் அலுவலர்களுக்கும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் உட்பட அரசாங்க கணக்குகள் பற்றிய குழு அலுவலகத்தின் சகல அலுவலர்களுக்கும் குழு தனது நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதாக இதன்போது குறிப்பிட விரும்புகிறேன்.

கபீர் ஹசீம்
தவிசாளர்
அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு

சுருக்க அறிக்கை

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவால் “வெளிநாட்டு பணவனுப்பல்களின் அடிப்படையில் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்யும் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்குரியதாக 2022 மே மாதம் 01ஆந் திகதி முதல் 2023 செத்தெம்பர் மாதம் 15ஆந் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட உத்தேச திட்டம்” தொடர்பாக விசாரணை செய்வதற்காக குழுவால் நடத்தப்பட்ட கூட்டத்தின் பின்னணி, கலந்துரையாடப்பட்ட விடயங்கள், பிரதம கணக்கீட்டு அலுவலரின் விளக்கங்கள், குழுவின் பரிந்துரைகள் என்பன இவ்வறிக்கையில் உள்ளடங்குகின்றன.

குழுக்கூட்டம் நடத்தப்பட்டத் திகதி - 2025.04.02

அழைக்கப்பட்ட நிறுவனங்கள்

- வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

  இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம்

- நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

  அரச நிதித் திணைக்களம்

  இலங்கைச் சுங்கம்

  இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்

  வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

- தொழில் அமைச்சு
- போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு

  மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

விசாரணை உதவி : தேசிய கணக்காய்வு அலுவலகம்

பின்னணி

““வெளிநாட்டு பணவனுப்பல்களின் அடிப்படையில் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்யும் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்குரியதாக 2022 மே மாதம் 01ஆந் திகதி முதல் 2023 செத்தெம்பர் மாதம் 15ஆந் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட உத்தேசத் திட்டம்” தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியால் 2024.09.05 திகதிய விசேட கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டது.

அமுல்படுத்தப்பட்ட திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட முறைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு, பயன்படுத்திய அளவுகோல்கள், சுற்றுநிருபங்களை வெளியிடல், வாகனங்களைப் பதிவு செய்தல் மற்றும் வரி அறவிடல், பணத்தூயதாக்கல் அபாயம் போன்ற விடயங்கள் தொடர்பாக மேலும் கலந்துரையாடப்படும் விசேட கணக்காய்வு அறிக்கையின் உள்ளடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகவல்கள் சுருக்கமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. அனுப்பப்பட்ட பணவனுப்பல்களின் அடிப்படையில், அதாவது அப்பணவனுப்பல்களின் 50 வீதம் வரை செ.கா.ச. (CIF) பெறுமதியுடைய மின்சார வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்கும் திட்டம் அப்போதைய தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சினால் 2022ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

2. புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மின்சார வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்கி, புலம்பெயர் தொழிலாளர்களால்

இலங்கைக்கு கிடைக்கும் பணவனுப்பல்களை அதிகரிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

3. 2022 மே மாதம் 01ஆந் திகதி முதல் 2023 செத்தெம்பர் 15ஆந் திகதி வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு பணவனுப்பல்களை மேற்கொண்ட புலம்பெயர் தொழிலாளர்களுக்கு இந்நன்மையை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டது.

4. வெளிநாட்டு பணவனுப்பல்களை மேற்கொள்ளும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட விசேட நன்மைகள் :-

   4.1 வாகன இறக்குமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் மின்சார வாகனத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரமொன்றை வழங்கல்.

   4.2 இறக்குமதி செய்யும் வாகனம் மீது விதிக்கப்படும் வரி விடுதலை எல்லையை ரூ. 6 மில்லியன் தொடக்கம் ரூ. 12 மில்லியன் வரை அதிகரித்து வரிச்சலுகை வழங்கல்.

5. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம் 2022 செத்தெம்பர் 22 ஆந் திகதி தொடக்கம் 2024 யூன் 30ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 1077 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன் அதில் 77 அனுமதிப் பத்திரங்கள் இரத்துச்செய்யப்பட்டன.

6. 2024 மார்ச்சு 11ஆந் திகதியளவில் செல்லுபடியான 1000 அனுமதிப்பத்திரங்களுள் 921இற்கு மாத்திரமே வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு உரிய அனுமதிப்பத்திரமுடையோர் நடவடிக்கை மேற்கொண்டிருந்ததுடன் மேற்படி திகதியில்

இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுள் 699 மாத்திரமே மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

7. 2024ஆம் ஆண்டு யூன் மாதம் 30ஆந் திகதியளவில் 121,505,640 அமெரிக்க டொலர் வெளிநாட்டு பணம், அத்திட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு கிடைக்கப் பெற்றிருந்ததுடன், இறக்குமதி செய்யப்பட்ட 510 வாகனங்களுக்காக 24,100,757 அமெரிக்க டொலர்கள் வெளிநாடுகளுக்கு செலுத்தப்பட்டன.

விசாரணையின் போது இனங்கண்ட சிக்கல்கள் மற்றும் அவதானிப்புகள்

வெளிநாட்டு பணவனுப்பல்களின் அடிப்படையில் வெளிநாடுகளில் பணிபுரிகின்ற இலங்கையர்களுக்கு முழுமையான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்குரியதாக 2022 மே மாதம் 01ஆந் திகதி முதல் 2023 செத்தெம்பர் மாதம் 15ஆந் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட உத்தேசத் திட்டம் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியால் 2024.09.05 திகதிய வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையில் உள்ள விடயங்களையும் உள்ளடக்கியதாக ஆராய்வதற்கான அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் கூட்டம் 2025.04.02 திகதியன்று பாராளுமன்ற குழு அறை இலக்கம் 06இல் இடம்பெற்றது.

மேற்படித் திட்டம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் அதன்போது வெளிவந்த விடயங்கள் மற்றும் குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

01. இத்திட்டம் தொடர்பான சுற்றுநிருபம் அமைச்சரவையின் தீர்மானத்திற்கு புறம்பாக வெளியிடப்பட்டிருந்தமை

    இத்திட்டம் தொடர்பான அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைவாக அனுமதிப் பத்திரங்களை வழங்கும் அதிகாரம் நிதி அமைச்சின் கீழுள்ள இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுபாட்டுத் திணைக்களத்தின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ளபோதும், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டமை.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு செயலாளரால் சுற்றுநிருபத்தின் வரைவு தயாரிக்கப்பட்டு நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்கென வழங்கப்பட்டதுடன் நிதி அமைச்சின் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தால் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம் மூலம் சுற்றுநிருபத்தின் வரைவு அமைச்சரவையின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட சில விடயங்களுக்கு புறம்பாக இருப்பதாக அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும் தொழில் அமைச்சின் செயலாளருக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான அதிகாரம் இல்லை என அந்த அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பது குழுக் கூட்டத்தின்போது தெரியவந்தது.

அதற்கமைவாக, நிதி அமைச்சின் அலுவலர்களும் தமது கடமைகளை பொருட்படுத்தாமல் செயற்பட்டுள்ளமையும், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரால் அமைச்சரவையின் தீர்மானத்தையும் மீறி அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தி அனுமதிப் பத்திரத்தை வழங்கியுள்ளமையையும் குழு அவதானித்தது.

02. தயாரிக்கப்பட்ட சுற்றுநிருபம் பல சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டமை.

ஆரம்ப சுற்றுநிருபத்தில் உரிய விண்ணப்பதாரிகள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்ய வேண்டியது அவசியம் எனக் குறிபிடப்பட்ட நிபந்தனை பின்னர் நீக்கப்பட்டு, “வெளிநாட்டில் பணிபுரியும் யாரேனும் இலங்கையர் ஒருவர்” என இக்கருத்திட்டத்தின் கீழ் வாகன அனுமதிப் பத்திரங்களைப் பெறும் வகுதி வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளதாக குழுக்கூட்டத்தின்போது தெரிய வந்தது.

இதன்போது வெளிநாட்டிலிருக்க வேண்டிய காலப்பகுதி திட்டவட்டமாக குறிப்பிடப்படாமல் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்ய வேண்டிய தேவையை நீக்குவதால், வெளிநாட்டுக்குச் செல்லாத மற்றும் மிகக் குறுகிய காலப்பகுதிக்கு வெளிநாட்டுக்குச் சென்ற ஆட்கள் மற்றும் தகைமையற்ற ஆட்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும், இக்கருத்திட்டத்தை சரியான முறையில் ஒழுங்குறுத்துவதற்குள்ள இயலுமை இல்லாமல் போயிருப்பதாகவும் குழுவால் அவதானிக்கப்பட்டது.

03. வாகன இறக்குமதி வசதிகளை வழங்குவதற்காக கம்பெனிகளை தெரிவு செய்துள்ள விதம் சிக்கல் வாய்ந்ததாக காணப்படுகின்றமை

34 கம்பெனிகள் வாகன இறக்குமதி வசதிகளை வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு பதிவு செய்யப்பட்ட 921 வாகனங்களுள் 640 வாகனங்களுக்கு இரண்டு கம்பெனிகளால் (Overland Automobile மற்றும் Auto Capital Investment) வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

இத்திட்டத்தின் கீழ் வாகன இறக்குமதிக்கு வசதிகளை வழங்குவதற்கு நிறுவனங்களை தெரிவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட அளவுகோல்கள் மற்றும் பின்பற்றப்பட்ட செயன்முறை தொடர்பாக குழு வினவியது.

இதன்போது, பிற்காலத்தில் அமைச்சின் விடயப் பரப்புகள் மாற்றமடைந்ததற்கமைவாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு, தொழில் அமைச்சிலிருந்து நீக்கப்பட்டு வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா

அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டபோதும், தமது அமைச்சிற்கு மேற்படித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆவணங்கள் முறையாக கையளிக்கப்படவில்லை என வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். மேலும் கம்பெனியை தெரிவு செய்வது தொடர்பாக இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள், கிடைக்கப் பெற்ற விண்ணப்பப்படிவங்கள் பற்றிய பட்டியல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட கம்பெனிகளின் பெயர்ப்பட்டியல் தமது அமைச்சுக்கு கிடைக்கப் பெற்றுள்ள கோப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளபோதும் கம்பெனிகளை தெரிவு செய்யும் அளவுகோல்கள் அல்லது கம்பெனிகளை தெரிவு செய்ய பின்பற்றிய வழிமுறைகள் பற்றிய குறிப்புகள் எவையும் அதில் உள்ளடங்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் வாகன இறக்குமதிக்கான வசதிகளை வழங்குவதற்காக நிறுவனங்களை தெரிவு செய்யும் செயன்முறையானது வெளிப்படைத்தன்மையின்றி, கடைபிடித்துள்ள நடபடிமுறையை தெரிவு செய்த சில நிறுவனங்களுக்கு மாத்திரம் நன்மை கிடைக்கக் கூடிய வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என குழு தீர்மானித்தது.

04. வெளிநாட்டுக்குச் செல்லாத நபர்களுக்கும் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளமை மற்றும் சில நபர்களுக்கு 02 அனுமதிப் பத்திரங்கள் வீதம் வழங்கப்பட்டுள்ளமை

வெளிநாட்டுச் செல்லாத 04 நபர்களுக்கும், விண்ணப்பப்படிவத்தில் தொழிலை குறிப்பிடாத 61 நபர்களுக்கும் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளமை மற்றும் ஒரு நபருக்கு 02 அனுமதிப் பத்திரங்களை வழங்கிய

சந்தர்ப்பங்களை கணக்காய்வில் சுட்டிக்காட்டியதன் பின்னர் அவை சரி செய்யப்பட்டதாகவும் கணக்காய்வு தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டது. அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்திருக்க வேண்டுமென முதலில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனை பின்னர் மாற்றப்பட்டமை தொடர்பாக கருத்திற்கொள்ளாமல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமையால் பொருத்தமற்ற நபர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை அவதானிக்கப்படுகிறது என கணக்காய்வாளர் தலைமையதிபதியால் இதன்போது மேலும் தெரிவிக்கப்பட்டது.

தமது கடமை காலத்தில் புலம்பெயர் தொழிலாளியை இனங்காண்பதற்கு உரிய ஆய்வுகளை செய்ததாகவும், எச்சந்தர்ப்பத்திலும் ஒரு நபருக்கு இரண்டு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை எனவும், அப்போதைய தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி. கே.டீ.ஆர். ஓல்கா இது தொடர்பாக கருத்து தெரிவித்து குழு முன் தெரிவித்தார். மேலும், தாம் குறுகிய காலமே அப்பதவியில் கடமையாற்றியதாகவும், ஏற்பட்ட சிக்கலான நிலை காரணமாக 2023ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04ஆந் திகதி இச்செயற்பாட்டிருந்து விலக வேண்டி ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த சம்பவங்கள் தொடர்பான மூல ஆவணங்கள் மேலதிக விசாரணைக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் பி.க.அ/க.அ குழுவிடம் தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்குச் செல்லாத நபர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கியுள்ளமை மற்றும் ஒரு நபருக்கு 02 அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளமை என்பன கடுமையான நிர்வாகத் தவறுகள் என்பதை குழு அவதானித்தது.

5. இறக்குமதிச் செய்யப்பட்ட வாகனங்களை பிற தரப்பினருக்கு ஒப்படைத்தல் மற்றும் அவ்வாறு ஒப்படைக்கும்போது வரி விதித்தல்.

ஆரம்பத்தில் அமைச்சரவை தீர்மானத்தில் இறக்குமதிச் செய்யப்பட்ட வாகனங்களை வேறொரு தரப்பினருக்கு ஒப்படைப்பது குறித்து குறிப்பிடப்படாவிட்டாலும், பின்னர் அமைச்சரவை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது. மேலும், அவ்வாறு ஒப்படைக்கும்போது அனுமதிப்பத்திரத்தின் மதிப்பில் 10% கட்டணத்தை வசூலிப்பதில் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் சிக்கலான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியுள்ளதென்றும், ஏனெனில் அது வர்த்தமானியில் வரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதென்றும், சில சந்தர்ப்பங்களில் இந்த வரி வசூலிக்கப்படவில்லையென்றும் கணக்காய்வுத் தரப்பால் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி வரி விதிக்க முடியாதென்பதால், அவ்வாறானதொரு வரி விதிக்கப்பட்டிருப்பது சட்டபூர்வமற்றதென்றும் குழு அவதானித்தது.

6. இறக்குமதி செய்யப்பட்ட சில வாகனங்கள் நிபந்தனை காலவரையரைக்குப் பிறகு பதிவு செய்யப்பட்டிருத்தல் மற்றும் இன்னும் சில வாகனங்கள் இதுவரை பதிவு செய்யப்படாதிருத்தல்.
இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1077 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதென்றும், அவற்றில் பல்வேறுபட்ட நிர்வாக காரணங்களுக்காக 77 அனுமதிப்பத்திரங்கள் இரத்து

செய்யப்பட்டுள்ளதென்றும், செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரங்களின் கீழ் 921 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதென்றும் குழுவில் தெரிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இவற்றில் 699 வாகனங்கள் மாத்திரமே மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் மீதமுள்ள வாகனங்களின் நிலை மற்றும் அவற்றின் உரிமையாளர்கள் தொடர்பில் விசாரணையொன்று இதுவரை நடத்தப்படாமை குறித்தும் குழு கவனத்திற் கொண்டது.

அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் உட்பட 9 நிறுவனங்களுக்கு அதன் பிரதி அனுப்பப்படுமென்று கூறப்பட்டிருந்தபோதிலும் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களில் சொற்ப எண்ணிக்கையிலான பிரதிகள் மாத்திரமே மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது. எனவே, இதுவரை பதிவு செய்யப்படாத வாகனங்களின் நிலை மற்றும் அவற்றின் உரிமையாளர்கள் யார் என்பது குறித்து தனக்கு தெரியாதென்றும், அது தொடர்பில் தங்கள் நிறுவனம் இன்னும் விசாரணையொன்றை நடத்தவில்லையென்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலர்கள் தெரிவித்தனர்.

அனுமதிப்பத்திர நிபந்தனைகளின்படி இறக்குமதிச் செய்யப்பட்ட வாகனங்கள் 2024 செத்தெம்பர் 30ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யப்பட வேண்டுமென்று ஆரம்பத்தில் விதிக்கப்பட்டிருந்ததால் அந்தக் காலவரையரைக்குப் பின் இத்திட்டத்தின் கீழ் வாகனப் பதிவை தற்காலிகமாக நிறுத்தி வைத்து அவ்வாறு தாமதமாகச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து போக்குவரத்து அமைச்சின் செயலாளரிடமிருந்தும் நிதி அமைச்சிடமிருந்தும் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத்

திணைக்களத்தின் சட்ட அலுவலர் குழுவில் தெரிவித்தார். மேலும், இதற்கிடையில் இறக்குமதிச் செய்யப்பட்ட வாகனங்களைப் பதிவு செய்வதற்காக அனுமதிப்பெற்றவர் மற்றும் அனுமதிப்பெற்றவரிடமிருந்து வாகனத்தை வாங்கிய நபர் என இரண்டு தரப்பினரால் நீதிமன்றத்தில் இரண்டு ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதென்றும், அந்த மனுக்களைப் பரிசீலித்த பிறகு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையுத்தரவுக்கு இணங்க, அரசாங்கத்தினால் இது தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளும் எந்தவொரு கொள்கை ரீதியான தீர்மானத்திற்கும் கட்டுப்பட வேண்டுமென்றும் சத்தியக் கடதாசியொன்றை பெற்ற பிறகு இத்திட்டத்தின் கீழ் மேலும் இறக்குமதிச் செய்யப்பட்ட 55 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டதாக அவர் குழுவில் தெரிவித்தார்.

மேற்படி திட்டத்தின் கீழ் சொகுசு வாகனங்களுக்கான வரி விலக்கு வரம்பு 6 மில்லியன் ரூபாயிலிருந்து 12 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் காரணமாக சாதாரண முறையின் கீழ் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய சுமார் 2.4 பில்லியன் ரூபாய் வரி வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளதாகவும் கணக்காய்வுப் பிரிவால் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறு இறக்குமதிச் செய்யப்பட்ட வாகனங்கள் 2024 செத்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்திய காரணத்தினால், மேற்படி திகதிக்குப் பிறகு மேலும் அவற்றைப் பதிவு செய்யாமல் வைத்திருப்பது சட்டவிரோதமானதென்றும், பதிவு செய்யாமல் அவ்வாறு வைக்கப்பட்டதற்கான காரணம், அவை பயன்பாட்டிற்காக அன்றி பிற தரப்பினருக்கு விற்பனை செய்வதற்காக வணிக நோக்கத்துடன் இறக்குமதி செய்யப்பட்டது என்றும் பொருள்படுவதாக குழு அவதானித்தது. மேலும்,

அனுமதிப்பத்திர நிபந்தனைகளின் படி, குறிப்பிட்ட காலவரையரைக்குள் இறக்குமதிச் செய்யப்பட்டு, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவுசெய்த வாகனங்கள் மேற்கூறிய வரி விலக்குகளுக்கு உட்படுகின்றபோதிலும் குறிப்பிட்ட காலவரையரைக்குள் பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கு வரி விலக்கு கிடைக்கப்பெறாதென்பது குழுவின் முடிவாக இருந்தது.

நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்படும் அனைத்து வாகனங்களுக்கும் இலங்கை சுங்கத்தினால் சொகுசு வரி விதிக்கப்படுவதனாலும் இத்திட்டத்தின் கீழ் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் ஏலவே சுங்கத்தால் தடைநீக்கம் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளதனாலும், அனுமதிப்பத்திர நிபந்தனை காலத்திற்குள் பதிவு செய்யப்படாத வாகனங்கள் எதிர்காலத்தில் பதிவுக்காக சமர்ப்பிக்கப்பட்டால், அவ்வாகனங்களுக்கான சொகுசு வரியை எவ்வாறு அறவிடுவது என்பது குறித்தும் குழுவில் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது.

அங்கு, எதிர்காலத்தில் எடுக்கப்படும் முடிவுகளின்படி, இதுவரை பதிவு செய்யப்படாத வாகனங்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால், அச்சந்தர்ப்பத்தில் சொகுசு வரியை மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மூலம் அறவிடுவதில் சட்ட சிக்கல்கள் காணப்படுவதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சின் பி.க.அ/க.அ குழுவில் தெரிவித்தனர்.

இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ள, எதிர்காலத்தில் பதிவுக்காக சமர்ப்பிக்கப்படும் வாகனங்கள் இருப்பின் அவ்வாகனங்கள் தொடர்பில் சொகுசு வரியை அறவிட பொருத்தமான வழிமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டுமென குழுவில் அவதானிக்கப்பட்டது.

7. வெளிநாட்டுப் பணவனுப்பல்களில் 50%ஐ விட அதிகமாக வாகன இறக்குமதி செய்திருத்தல்.

குறித்த திட்டத்தின்படி அனுமதிப்பத்திரதாரர்களால் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையரைக்குள் நாட்டிற்கு அனுப்பப்பட்ட வெளிநாட்டுப் பணவனுப்பல்களில் அதிகபட்சமாக 50%ஐ மாத்திரமே பயன்படுத்தி வாகனங்களை இறக்குமதி செய்ய வேண்டுமென்றபோதிலும் வெளிநாட்டுப் பணவனுப்பல்களில் 50% ஐத் தாண்டிய அனுமதிப்பத்திரங்கள் 16 வழங்கப்பட்டுள்ளதாக கணக்காய்வினால் தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும், அனுமதிப்பத்திரங்களைப் பெற்று வாகனங்களை இறக்குமதி செய்த பிறகு நாட்டிற்கு அனுப்பப்பட்ட மீதமுள்ள வெளிநாட்டுப் பணவனுப்பல் தொகை அகற்றப்பட்டதா என்ற விடயம் தொடர்பில் இத்திட்டத்தில் கவனம் செலுத்தப்படவில்லை என குழுவில் தெரிவிக்கப்பட்டது.

சுற்றறிக்கை வெளியிடப்பட்ட பின் இது குறித்து இலங்கை மத்திய வங்கி உட்பட பிற வங்கிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதாகவும், வெளிநாட்டு வங்கிகளிலிருந்து வரும் பணப்பரிமாற்றங்கள் பற்றிய தகவல்களை அமைச்சு மட்டத்தில் அரச அலுவலர்களுக்கு பரிசோதிக்க முடியாததால் மேற்கூறிய விடயம் தொடர்பாக வங்கிகள் மூலம் வழங்கப்படும் உறுதிப்படுத்தல் மீது நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டுமென்பதாகவும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளராக பணியாற்றிய திருமதி கே.டி.ஆர். ஓல்கா இது தொடர்பாக தனது கருத்துக்களை தெரிவித்தார்.

மேலும், இத்திட்டத்தின் கீழ் பணத்தூய்தாக்கலுடன் தொடர்புடைய செயற்பாடுகளைத் தடுக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்தும் குழு வினவியது.

பணத்தூய்தாக்கலுடன் தொடர்பான விசாரணைகளை இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரிவின் மூலம் மாத்திரமே

நடத்த முடியும் என்பதாகவும் அப்பிரிவின் மூலம் இது தொடர்பாக விசாரிப்பதற்காக சிறப்பு கணக்காய்வு அறிக்கையின் மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வுப் பிரிவு குழுவிடம் தெரிவித்தது.

மீளாய்வு

இந்நாடு கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் நாட்டில் நிலவிய டொலர் ஒதுக்கத்தின் பற்றாக்குறைக்கு சிறிதளவேனும் தீர்வைக் கொண்டுவரும் நோக்கில் இத்திட்டத்தை செயல்படுத்த முன்மொழியப்பட்டது. எவ்வாறாயினும் மேற்படித் திட்டத்தை பிரதான நோக்கத்தை நோக்கி நகர்த்துவதற்குப் பதிலாக நாட்டிற்குள் வாகனங்களை இறக்குமதி செய்வது கட்டுப்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவினருக்கு மாத்திரம் சிறப்பு சலுகைகள் மற்றும் நன்மைகள் கிடைக்கும் வகையில் இத்திட்டத்தை செயல்படுத்த சம்பந்தப்பட்ட அலுவலர்கள் செயற்பட்டுள்ளதாகவும் அச்செயற்பாட்டில் பல சட்டவிரோத செயல்களும் முறைகேடுகளும் நடைபெற்றுள்ளதாகவும் அதன் விளைவாக நாட்டிற்கு பாரிய நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதுமே குழுவின் பிரதான முடிவாகும்.

குழுவினால் விசாரிக்கப்பட்ட ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் வழங்கப்பட்ட பரிந்துரைகள் இவ்வறிக்கையில் "குழுவின் பரிந்துரைகள்" என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்தும்போது அலுவலர்களினால் நிறுவன ரீதியாக செய்துள்ள தவறுகள் குறித்து உரிய விசாரணைகளை நடத்துமாறும் அவ்வாறு குற்றங்களைச் செய்த அலுவலர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் உரிய பிரதான கணக்கீட்டு அலுவலர்கள்/ கணக்கீட்டு அலுவலர்களுக்கு ஏலவே குழு பரிந்துரைகளை வழங்கியுள்ளதோடு அவ்வாறு வழங்கியுள்ள பரிந்துரைகளை செயல்படுத்துவதிலுள்ள முன்னேற்றம் குறித்து எதிர்காலக் குழு கூட்டங்களில் வினவப்படும்.

மேலும், இவ்வறிக்கை பாராளுமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டு அங்கீகரித்து மேற்கூறிய திட்டத்தை செயல்படுத்தும்போது நடைபெற்றுள்ள சட்டவிரோத மற்றும் குற்றச் செயல்கள் குறித்து விசாரணைகளை நடாத்தி, அவற்றிற்கு பங்களிப்புச் செய்த

நபர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு தகுந்த தண்டனைகளை வழங்குவதற்காக பொருத்தமானதொரு நிறுவனத்திற்கு சமர்ப்பிப்பதற்காக சட்டத்துறை தலைமை அதிபதியிடம் முன்வைக்குமாறு இக்குழு பிரேரிக்கின்றது.

அதற்காக இவ்வறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்ததன் பின் பாராளுமன்ற தீர்மானத்தின் மூலம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்டத்துறை தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டுமென குழு தீர்மானித்தது.

குழுவின் பரிந்துரைகள்

பரிந்துரை - 01

வெளிநாட்டுப் பணவனுப்பல்களின் அடிப்படையில் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு முழுமையான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக உரிய காலவரையரைக்குள் அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பாக குழுவொன்றை நியமித்து உள்ளக விசாரணை நடத்தி ஒரு மாதத்திற்குள் (2025.05.02 ஆம் திகக்கு முன்) குழுவிற்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டது.

பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்

செயலாளர் – வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
(குறித்த அறிக்கை குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அது இணைப்பு 1 எனக் குறிப்பிட்டு இணைக்கப்பட்டுள்ளது.)

பரிந்துரை - 02

அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட இலத்திரனியல் வாகனங்களில் இதுவரை மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத வாகனங்கள் குறித்து போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சின், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தேவையான உதவிகளை பெற்று விசாரணை நடத்தி குழுவிற்கு அறிக்கையிடுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டிய/பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்

செயலாளர் – வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

பரிந்துரை - 03

இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்து அனுமதிப்பத்திர நிபந்தனைகளின்படி உரிய காலவரையரைக்குள் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கு அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரியை அறவிட பொருத்தமான வழிமுறையொன்றை தயாரித்து குறித்த வரியை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டிய/பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்

செயலாளர் – நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

பரிந்துரை - 04

இவ்வறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின் பாராளுமன்றப் பிரேரணை நிறைவேற்றல் மூலம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்டத்துறை தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்

பாராளுமன்ற செயலாளர் நாயகம் – இலங்கைப் பாராளுமன்றம்

<u>பரிந்துரை - 05</u>

இவ்விசாரணைக்கு அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்பட்ட 2024 செப்டம்பர் 05 ஆம் திகதி தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட சிறப்பு கணக்காய்வு அறிக்கையிலுள்ள தகவல்களின்படி உரிய அதிகாரிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கெதிராக நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதோடு அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை செயல்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இணைப்புக்கள்

இணைப்பு - 1

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குரிய முன்மொழிவுத் திட்டம் தொடர்பான உள்ளக புலனாய்வு அறிக்கை

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குரிய முன்மொழிவுத் திட்டம்

2025.03.02 ஆம் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் தொடர்பான நிருவாகக் குழுக் கூட்டத்தில் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குரிய முன்மொழிவுத் திட்டம் தொடர்பில் விடயங்களை வினவியதன் பின்னர் அறிவிக்கப்பட்டதற்கு அமைய மற்றும் 2025 ஏப்ரல் 08 ஆம் திகதிய மற்றும் PG/LEG/COPA/02/Special(10)01 ஆம் இலக்க கடிதத்திற்கு அமைய வெளிநாட்டு அலுவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டு உள்ளகப் புலனாய்வு ஒன்றினை மேற்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலுக்கு அமைய இந்த அறிக்கை குழுவினால் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படுகின்றது.

I. ஜே.எஸ். பிரசாத் பியசேன, மேலதிகச் செயலாளர் (நிருவாகம்) வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு – தலைவர்
II. கே.ஏ.எஸ். ஹேமகாந்தி, பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) – உறுப்பினர்
III. சி.பி. லொகுகலப்பத்தி, பிரதான கணக்காளர் – உறுப்பினர்
IV. கே. நிகரில்காந்த், சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி) – உறுப்பினர்

2024.09.20 ஆம் திகதியிடப்பட்ட மற்றும் MOL/POL/01/2022 – iii ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் மேலதிகச் செயலாளர் (நிருவாகம்) ஜே.எஸ். பிரசாத் பியசேன அவர்களின் பெயரில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கு உரிய வகையில் அனுப்பி வைக்கப்பட்ட மற்றும் 2024.10.30 ஆம் திகதியிடப்பட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பிரிவினால் பௌதீக ரீதியாகப் பொறுப்பேற்கப்பட்ட கோப்புக்கள் இந்தக் குழுவின் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. மேற்படி கோப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் மற்றும் கோப்புக்கள் தொடர்பான தகவல்கள் என்பன இணைப்பு 01 இன் மூலம் முன்வைக்கப்பட்டு உள்ளன.

இந்தக் கோப்புக்களுள் அனுமதிப்பத்திரங்களுக்கு உரிய கோப்புக்கள் MOL/FE/EVP/501 ஆம் இலக்கம் முதல் MOL/FE/EVP/1077 வரையான கோப்புக்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துக் கோப்புக்களினதும் மூலப் பிரதிகளைக் கொண்ட கோப்புக்கள் தற்போதாகும் போது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக மேற்படி ஆணைக்குழுவிடம் பொறுப்பேற்கப்பட்டு உள்ளன. ஆதலால் இந்தக் குழுவின் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பிரிவின் பொறுப்பில் உள்ள பிரதிக் கோப்புக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ள ஆவணங்கள் ஆகும். இதற்கு மேலதிகமாக அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் மூலப் பிரதிகள் கோப்புக்களின் அறிக்கையினைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

1. பின்னணி

1.1. 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் விடயம், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்த சந்தர்ப்பத்தில் அப்போது தோன்றியிருந்த வெளிநாட்டு ஒதுக்குகளின் பற்றாக்குறைக்குத் தீர்வு ஒன்றாக பல்வேறு அணுகுமுறைகள் முன்மொழியப்பட்டு உள்ளதுடன் அதிகமான வகையில் வெளிநாட்டு பண அனுப்பீடுகளைத் தருவித்துக் கொள்ளலும் அதில் ஒரு முன்மொழிவாகக் காணப்பட்டது. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களினால் ஈட்டப்படும் பணத்தை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட பணம் அனுப்பி வைக்கும் வழிமுறைகளுக்குப் புறம்பான வகையில் இந்நாட்டிற்கு அனுப்பி வைத்தலும் தீவிர பிரச்சினை ஒன்றாக நிலவி உள்ளது. ஆதலால் வங்கி முறைமையின் ஊடாக இந்த நாட்டிற்கு பணம் அனுப்புவதனை ஊக்குவிப்பதற்காக பல்வேறு ஊக்குவிப்பு முன்மொழிவுத் திட்டங்களை அறிமுகம் செய்வதற்காக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அவர்களினால் அமைச்சரவையிடம் 2022.06.17 ஆம் திகதியிடப்பட்ட "சட்ட ரீதியான வழிமுறைகளின் ஊடாக பணம் அனுப்புவதனை மேம்படுத்துவதற்காக வெளிநாடுகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குதல்" எனும் தலைப்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று முன்வைக்கப்பட்டு உள்ளது. மேற்படி விஞ்ஞாபனத்தின் மூலம் இந்நாட்டிற்கு அனுமதிக்கப்பட்ட வங்கிகளின் ஊடாக அனுப்பி வைக்கப்படும் பண அனுப்பீடுகளின் தொகைக்கு அமைய விஷேட தீர்வை வரியற்ற கொடுப்பனவு முறை ஒன்றினையும் மற்றும் அரைவாசி மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களை (Hybrid Electric Vehicle) இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றினையும் வழங்குவதற்கு முன்மொழியப்பட்டு உள்ளது. அமைச்சரவையினால் இந்த முன்மொழிவு தொடர்பில் ஆய்வு செய்து பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை ஒன்றினை வழங்குவதற்காக குழு ஒன்றினை நியமிப்பதற்கு அப/22/0860/524/008 ஆம் இலக்க மற்றும் 2022.07.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அறியத்தரப்பட்டு உள்ளது.

1.2. மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய முன்மொழிவுகள் கோவை தொடர்பில் ஆய்வு செய்த குழுவினால் வழங்கப்பட்ட அறிக்கை 2022.07.23 ஆம் திகதிய மற்றும் ML/ES/8/1/2 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அமைச்சரவை அனுமதிக்காக முன்வைக்கப்பட்டு உள்ளது.

1.3. இந்த அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில் தீர்மானம் ஒன்றினை மேற்கொள்வதற்கு முன்னர் 2022.08.08 ஆம் திகதியிடப்பட்டு ML/ES/8/1/2 ஆம் இலக்கத்தின் ஊடாக, மின்சாரத்தினால் இயங்கும் மோட்டார் சைக்கிள்களைக் கொண்டு வருவதற்கு பண அனுப்புதல்கள் மேற்கொள்ளப்பட்ட காலத்தை 2022.05.01 ஆம் திகதி முதல் 2023.04.30 ஆம் திகதி வரையும், மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களுக்காக பண அனுப்புதல்கள் மேற்கொள்ளப்பட்ட காலத்தை 2022.05.01 ஆம் திகதி முதல் 2022.12.31 ஆம் திகதி வரையும் எனக் கருதுவதற்கும் மற்றும் குடிபெயர்ந்த தொழிலாளர் என்பது வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள எந்தவொரு இலங்கையரும் ஆகும் எனப் பொருள் கோடல் செய்வதற்கும் அமைச்சரவைக் குறிப்பு ஒன்று அமைச்சரவையிடம் முன்வைக்கப்பட்டு உள்ளது. அமைச்சரவைக் குறிப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி அப/22/1028/625/001 ஆம் இலக்க மற்றும் 2022.08.16 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் கடிதத்தின் மூலம் மேற்படி முன்மொழிவுகளுக்காக அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

1.4. மேற்படி அனுமதியினை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அமைச்சினால் MFE/DEV/HOB/03/VOL ii ஆம் இலக்க மற்றும் 2022.08.31 ஆம் திகதியிடப்பட்ட 02/2022 சுற்றுநிருபத்தின் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களினால் இந்நாட்டு வங்கி முறைமையின் ஊடாக அனுப்பி

வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பணத்தில் ஆகக் குறைந்தது 50% ஆன அளவினையாவது இலங்கை ரூபாவாக மாற்றியுள்ள குடிபெயர்ந்துள்ள தொழிலாளர்களுக்காக ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை வாகனம் ஒன்றினை இறக்குமதி செய்து கொள்வதற்கு இயலுமாகும் வகையிலான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட்டு உள்ளது.

1.5. இதன்போது கடன்பத்திரக் கடிதம் ஒன்றினை வழங்குவதற்காக தேவையான நிதியத்தினை பயணாளியின் வங்கிக் கணக்கில் இருந்து அனுமதிப்பத்திரதார வர்த்தக வங்கி ஒன்றின் ஊடாக உரிய கம்பனிக்கு மாற்றம் செய்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது. (வாகனங்களை இறக்குமதி செய்யும் மொத்த செலவினையும் பயணாளியினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பணத்தில் ஏற்பதாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சான்றுகள் காணப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது.) வாகனத்தின் செலவு பயணாளியினால் உரிய தரப்பினருக்கு செலுத்தப்பட வேண்டியது வெளிநாட்டுப் பணத்தில் இருந்து மாத்திரமே ஆகும் எனவும் உரிய அரசாங்க வரித் தொகை, பயணாளியினால் அனுமதிப்பத்திரதார வர்த்தக வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்ட அந்நியச் செலாவணியினை மாற்றி ரூபாக்களில் செலுத்தப்படுதல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டு உள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள தகைமை பெற்ற இலங்கையர்களினால் இந்நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பணத்தின் அளவு மற்றும் ரூபாக்களுக்கு மாற்றப்பட்டு உள்ள தொகை மற்றும் தனது அந்நியச் செலாவணியில் எஞ்சியுள்ள தொகை என்பன உட்பட மொத்தமாக வருடாந்தம் அனுப்பி வைக்கப்பட்ட அளவினைக் குறிப்பிட்டு உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்று உரிய வங்கியினால் வழங்கப்படுதல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

1.6. இந்த முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் மின்சாரத்தினால் இயங்கும் வாகனம் ஒன்றினை இறக்குமதி செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தை தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் (www.labourmin.gov.lk) அல்லது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் (www.slbfe.lk) இணையத்தளங்களின் ஊடாக பதிவிறக்கம் செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தினை உரிய சகல ஆவணங்களுடன் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிடம் ஒப்படைப்பதற்கு அல்லது / பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டு உள்ளது. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பவற்றை இலங்கையர் அல்லது அவரினால் எழுத்து மூலம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட ஒருவரின் மூலம் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் அமைச்சினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட திகதி முதல் ஆறு மாத காலப்பகுதி ஒன்றிற்காக செல்லுபடியாகும் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டு இருந்துள்ளது.

1.7. மேலும் 2022.08.31 ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள 2/2022 ஆம் இலக்கச் சுற்றுநிருபம், 2022.09.09 ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள 2/2022(i) ஆம் இலக்கச் சுற்றுநிருபம் மற்றும் 2022.09.16 ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள 22/2022(ii) ஆம் இலக்கச் சுற்றுநிருபம் என்பன தொடர்பில் அமைச்சரவையினை விழிப்புணர்வூட்டுவதற்கு 2022.10.11 ஆம் திகதிய மற்றும் ML/ES/6/1/2/2022 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பு முன்வைக்கப்பட்டு உள்ளது. மேற்படி சுற்றுநிருபங்களின் ஊடாக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை இரண்டு வருடங்களுக்கு முன்னர் மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு ஒப்படைப்பதாயின் ஒப்படைக்கும் வரி என்ற வகையில் வாகனத்தின் CIF பெறுமதியில் 10% தொகையினை ஐக்கிய அமெரிக்க டொலர்களில் செலுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என 2/2022(i)

ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் திருத்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. மேலும் அதன் ஊடாக இறக்குமதி செய்ய முடியுமான வாகனத்தின் உச்சளவிலான CIF பெறுமதியில் திருத்தம் மேற்கொள்ளல், மின்கலம் தொடர்பான ஏற்பாட்டு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான தீர்மானிக்கும் அதிகாரம் மற்றும் பயன்படுத்தப்படாத வாகனங்கள் என்பன பொருள்கோடல் செய்யப்பட்டு உள்ளன. 2/2022(ii) ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின் மூலம் HS குறியீட்டின் திருத்தம் மற்றும் 5 வருட காலப்பகுதி ஒன்று வரை ஒப்படைக்கப்பட முடியாமை எனும் ஏற்பாட்டிற்குக் கட்டுப்பட்டு அதிகாரம் பெற்ற முகவர் ஒருவருக்கு / அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர் ஒருவருக்கு மூன்று வடிவமைப்பிலான மூன்று வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டு உள்ளது.

1.8. 2022.11.24 ஆம் திகதிய மற்றும் ML/ES/8/1/2-2022 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் மின்சாரத்தினால் இயங்கும் மோட்டார் வாகனங்களுக்கான உயர்சு வாகன வரி உரித்தாகும் வி.கா.கொ. (CIF) வரையறையில் திருத்தம் செய்வதற்கான முன்மொழிவு ஒன்று அமைச்சரவையிடம் முன்வைக்கப்பட்டு உள்ளது. 2023.01.16 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டது என அப/22/1916/625/001-III(A) ஆம் இலக்க மற்றும் 2023.01.24 ஆம் திகதிய தீர்மானங்களை அறியத்தருவதன் மூலம் அறிவிக்கப்பட்டு உள்ளது.

1.9. 2023.04.28 மற்றும் ML/ES/8/1/2-2023 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அனுமதிப்பத்திரங்களுக்கான தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பண அனுப்புதல் மேற்கொள்ளப்பட வேண்டிய காலத்தினை நீடிப்பதற்கு கோரப்பட்டு உள்ளதுடன் அப/23/0843/625/018 ஆம் இலக்க மற்றும் 2023.05.23 ஆம் திகதிய அமைச்சரவைச் செயலாளரின் கடிதத்தின் மூலம் மேற்படி காலப்பகுதிகளை 2023.09.15 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றதாக அறியத்தரப்பட்டு உள்ளது.

1.10. இந்த நாட்டில் இருந்து வெளிநாடுகளின் பல்வேறு நிறுவனங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் இலவச சேவைகளை வழங்குவதும் இந்நாட்டிற்கு அந்நியச் செலாவணியினைக் கொண்டு வரும் இலங்கையர்களையும் இந்த முன்மொழிவுத் திட்டத்தில் உள்ளடக்கிக் கொள்வதற்கும் இந்த அமைச்சினால் 2023.06.21 ஆம் திகதி அமைச்சரவையிடம் முன்மொழிவு ஒன்று முன்வைக்கப்பட்டு உள்ளதுடன் அமைச்சரவையினால் இந்த சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்தல் பொருத்தமற்றது என 2023.07.11 ஆம் திகதிய மற்றும் அப/23/1173/625/018-I ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக அறியத்தரப்பட்டு உள்ளது.

1.11. 2023.12.22 மற்றும் ML/ES/8/1/2-2023 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அனுமதிப்பத்திரங்களுக்கான தகைமைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பண அனுப்புதல்களை மேற்கொண்டவர்களுக்கு அனுமதிப்பத்திரங்களுக்காக விண்ணப்பிக்கும் காலத்தினை 2024.06.30 ஆம் திகதி வரை நீடித்து முதலாவது கட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்கும், 2023.06.01 ஆம் திகதி முதல் 2024.05.31 வரை அனுப்பி வைக்கப்பட்ட பண அனுப்பீடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி புதிய இரண்டாவது கட்டத்தினை ஆரம்பிப்பதற்கும், வாகனத்தினைப் பதிவு செய்து CIF பெறுமதியில் 10% இனைச் செலுத்தி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒப்படைப்பதற்கும் இரண்டாவது கட்டத்திற்காக சுற்றுநிருபம் ஒன்றினை வெளியிடுவதற்கும் முன்மொழியப்பட்டு உள்ளது. இரண்டாம் கட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை இணக்கம் தெரிவிக்கவில்லை எனவும் மற்றும் வாகனத்தினை ஒப்படைக்கும் மற்றும் அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் காலத்தினை நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி 2024.01.25 ஆம் திகதிய மற்றும் அப/23/2522/625/018-III ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அறியத்தரப்பட்டு உள்ளது.

2. முன்மொழிவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

2.1. இந்த முன்மொழிவுத் திட்டம் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் எவரும் இந்த அமைச்சின் கீழ் பணிபுரிவதில்லை ஆகையினால் இந்த முன்மொழிவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்ட விதம் தொடர்பான விடயங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கோப்புக்களைப் பரீட்சித்ததன் ஊடாக மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டன.

2.2. தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 2/2022 மற்றும் வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் வழிமுறை எனும் தலைப்பில் 2022.08.31 ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகள் என்பவற்றின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக 1077 எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டு உள்ளன. முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்கள் இணைப்பு 03 இன் ஊடாக காட்டப்பட்டு உள்ளன.

2.3. குறிப்பிட்ட ஒரு நபரினால் அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பம் ஒன்று கிடைக்கப் பெற்றவுடன் மேற்படி விண்ணப்பங்களுக்காக புதிய கோப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு உள்ளதுடன் மேற்படி கோப்புக்களுக்கு இலக்கங்களை வழங்கும் போது MOL/FE/EVP/"தொடர் இலக்கம்" எனும் மாதிரி பயன்படுத்தப்பட்டு உள்ளது. விண்ணப்பம் ஒன்று கிடைக்கப் பெற்றதன் பின்னர் அதனை திகதி முத்திரையிட்டு ஆவணத்தில் உள்ளடக்குதல் தொடர்பிலான தகவல் ஒன்று கோப்புக்களுக்கு அமைய வெளிப்படுத்தப்படவில்லை.

2.4. விண்ணப்பத்துடன் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டதன் பின்னர் அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ள சந்தர்ப்பத்தில் கோப்புக்களின் கோப்பு இலக்கமிடப்பட்ட இலக்கமே அனுமதிப்பத்திர இலக்கமாகவும் பயன்படுத்தப்பட்டு உள்ளது. வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் தகவல்கள் இணைப்பு 04 இன் ஊடாக காட்டப்பட்டு உள்ளன.

2.5. விண்ணப்பத்துடன் முன்வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒன்றில் ஈடுபட்டு உள்ளதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தினை மீண்டும் உறுதிப்படுத்திக்கொள்ளல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு உள்ளமை அவதானிக்கப்படவில்லை என்பதுடன் இந்த நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்ட பண அனுப்பீடுகளின் அளவினை உரிய வங்கி ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்ட விதம் கோப்புக்களின் மூலம் போதிய அளவில் அவதானிக்கப்படவில்லை.

2.6. எவரேனும் ஒரு நபரினால் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பம் ஒன்றில் உள்ள ஏதேனும் குறைபாடு ஒன்றின் காரணமாக அல்லது சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய அடிப்படைத் தகைமைகள் இல்லாமையின் அடிப்படையில் குறிப்பிட்ட ஒரு விண்ணப்பத்திற்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல் நிராகரிக்கப்பட்ட 65 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் தகவல்கள் இணைப்பு 05 இன் ஊடாக காட்டப்பட்டு உள்ளன.

2.7. குறிப்பிட்ட ஒரு விண்ணப்பத்திற்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல் நிராகரிக்கப்படுதல் காரணமாக அனுமதிப்பத்திரங்களுக்குப் பயன்படுத்தப்படும் இலக்கங்கள் ஒழுங்குமுறைக்குப் புறம்பான வகையில், தொடர் இலக்கங்கள் ஒழுங்கு முறையின்றி ஒழுங்கற்ற முறையிலான இலக்க வரிசையில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு உள்ளன. அவ்வாறே அனுமதிப்பத்திர இலக்கங்கள் மற்றும் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஆவணம் ஒன்று முறையான வகையில் பராமரிக்கப்பட்டு இருக்காமை அனுமதிப்பத்திரங்களின் தகவல்களை சரியான முறையில் பெற்றுக்கொள்வதில் தடை ஒன்றாக உள்ளது.

2.8. இந்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய வகையில் கணினியில் பேணப்பட்டு வந்த மின் தகவல்கள் ஆவணத்தின் தகவல்களும் உரிய முறையில் உள்ளடக்கப்பட்டது தொடர்பில், மீண்டும் பரிசீலனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு உள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை என்பதுடன் மேற்படி தகவல்கள் கோப்புக்களுக்கு ஒத்தியங்கும் வகையில் இற்றைப்படுத்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு உள்ளன என்பது அவதானிக்கப்படவில்லை.

2.9. விண்ணப்பங்களின் கோப்புக்கள் தொடர்பில் கோப்புக்களுக்கு உரிய ஆவணம் ஒன்று பேணப்பட்டு வராமையின் மூலம் கோப்புக்களின் இலக்கம் இரட்டிப்படைந்து உள்ள சந்தர்ப்பங்கள் உருவாகி உள்ளமை குழுவினால் அவதானிக்கப்பட்டதுடன் கோப்புக்களின் இலக்கங்களை அனுமதிப்பத்திர இலக்கங்களுக்காகவும் பயன்படுத்தி உள்ளமையின் காரணமாக அனுமதிப்பத்திரங்களின் இலக்கங்களும் இரட்டிப்படைந்து உள்ளன. இரட்டிப்படைந்து உள்ள இலக்கங்களைப் பின்னர் அடையாளம் கண்டு அனுமதிப்பத்திர இலக்கங்கள் வேறுபட்டது எனக் குறிப்பிடுவதற்கு உரோமன் இலக்கங்களின் மூலம் இலக்கமிடப்பட்ட போதிலும் அதன் மூலம் இரட்டிப்படையும் தவறு தடுக்கப்படவில்லை என்பதுடன் ஒரு இலக்கத்தில் ஒரு அனுமதிப்பத்திரத்திலும் கூடியளவு வழங்கப்படவில்லை எனும் நம்பிக்கையினை உறுதிப்படுத்துவதற்கு முடியாமல் போயுள்ளது. அவ்வாறு இலக்கங்கள் இரட்டிப்படைந்து வழங்கப்பட்டு உள்ள அனுமதிப்பத்திரங்களின் தகவல்கள் இணைப்பு 06 இன் ஊடாக காட்டப்பட்டு உள்ளன.

2.10. அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்கும் போது 06 மாத காலம் ஒன்றிற்கு செல்லுபடியாகும் வகையில் வழங்கப்பட்டு உள்ளது. அனுமதிப்பத்திர உரிமையாளரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி, வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்ட நாடு, வாகனத்தினை இறக்குமதி செய்வதற்கான வசதிகளை வழங்கும் நிறுவனம், இறக்குமதி செய்யப்படும் வாகனத்தின் வடிவமைப்பு, இறக்குமதி செய்யப்படும் வாகனத்தின் அதிகூடிய CIF பெறுமதி, வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரங்களின் காலம் எனும் தகவல்கள் அனுமதிப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டு உள்ளதுடன் நிதி மற்றும் பொருளாதார உறுதிப்பாடு அமைச்சிற்கு பிரதி ஒன்றும், மத்திய வங்கிக்கு பிரதி ஒன்றும், இலங்கைச் சுங்கத் திணைக்களத்திற்குப் பிரதி ஒன்றும், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்குப் பிரதி ஒன்றும், கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்குப் பிரதி ஒன்றும், கடன்பத்திரக் கடிதங்களைத் திறந்து வைப்பதற்கு எதிர்பார்க்கும் வங்கிக்கு பிரதி ஒன்றும் என்ற வகையில் அனுமதிப்பத்திரங்களின் பிரதிகளை அனுப்பி வைத்து அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு உள்ளன. வழங்கப்பட்டு உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களின் பிரதிகள் இணைப்பு 07 என்ற வகையில் இறுவட்டு ஒன்றின் ஊடாக முன்வைக்கப்பட்டு உள்ளன.

2.11. வாகனங்களின் இறக்குமதிக்கான செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரங்களின் காலம் முடிவடைதல், இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் வடிவமைப்பினை மாற்றிக் கொள்ளல், வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான வசதிகளை வழங்கும் நிறுவனத்தினை மாற்றிக் கொள்ளல் அல்லது இறக்குமதி செய்யப்படும் வாகனத்தின் அதிகூடிய CIF பெறுமதியினை மாற்றிக் கொள்ளல் என்பவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அதுவரை வழங்கப்பட்டு இருந்த அனுமதிப்பத்திரதாரரின் அனுமதிப்பத்திரத்தினை இரத்து செய்து புதிய அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டு உள்ளது. அவ்வாறு ஒரு அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்து புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் தகவல்கள் இணைப்பு 08 இன் மூலம் காட்டப்பட்டு உள்ளன.

2.12. இந்த அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்தி இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் தகவல்கள் இலங்கைச் சுங்கத்தின் மூலம் வழங்கப்பட்டு உள்ளன. மேற்படி இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் தகவல்கள் இணைப்பு 09 இன் மூலம் காட்டப்பட்டு உள்ளன.

2.13. மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அவர்களினால் வழங்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுள் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் தகவல்கள் இணைப்பு இலக்கம் 10 இன் மூலம் காட்டப்பட்டு உள்ளன. இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குமாறு மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளதுடன் 2025.04.30 ஆம் திகதியாகும் போதும் மேற்படி தகவல்கள் கிடைக்கப் பெறாமையினால் முன்னர் வழங்கப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்பட்டன. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் இருந்து இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் கிடைக்கப் பெற்றவுடன் உடனடியாக மேற்படி தகவல்களையும் அரச கணக்குகள் தொடர்பான நிருவாகக் குழுவிற்கு அனுப்பி வைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3. அரச கணக்குகள் தொடர்பான நிருவாகக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்கள்

3.1. மேற்படி 1.2 ஆம் பந்தியின் மூலம் எடுத்துக்காட்டப்பட்ட குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதனை இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரிடம் ஒப்படைக்காமல் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அமைச்சின் செயலாளரினால் மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அடிப்படையாக அமைந்த தகவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்ட கோப்புக்களில் உள்ளடக்கப்படவில்லை. மேற்படி குழு உறுப்பினர்கள் நிருவாகக் குழுக் கூட்டத்தின் போது விடயங்களை முன்வைத்த வகையில் வாகனங்களின் இறக்குமதியினை இடைநிறுத்தியுள்ள சந்தர்ப்பம் ஒன்றில் வாகன இறக்குமதிக்கு அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்க வேண்டி இருப்பதனால் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரிடம் ஒப்படைப்பதற்கு முன்மொழியப்பட்டதாக விடயங்கள் முன்வைக்கப்பட்டன. கோப்புகளைப் பரீட்சிப்பதன் மூலம் மேற்படி விடயங்கள் உறுதிப்படுத்தப்படும் அல்லது உறுதிப்படுத்தப்படாத விடயங்களைக் கண்டறிய முடியாதுள்ளது. அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் 2022.08.19 ஆம் திகதியிடப்பட்டு வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின் போது சுற்றுநிருபத்தினை வெளியிடுதல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு உள்ளது எனினும் கலந்துரையாடல்களின் பதிவுகள் கோப்புக்களில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக கூட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் அபிப்பிராயம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் இல்லை. எனினும் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரினால் 2298/55 ஆம் இலக்க மற்றும் 2022 செப்தெம்பர் 23 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளுக்கு அமைய வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுச் செயலாளரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

3.2. வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒன்றில் ஈடுபட்டுள்ள இலங்கையர் என்பது எந்தவொரு வெளிநாட்டிலும் தொழில் ஒன்றில் ஈடுபட்டுள்ள இலங்கையர் ஒருவராக அமைச்சரவை அனுமதியினை அடிப்படையாகக் கொண்டு 02/2022 ஆம் சுற்றுநிருபத்தின் மூலம் பொருள் கோடல் செய்யப்பட்டு உள்ளமையினால் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்திருத்தல் கட்டாய தேவைப்பாடு

ஒன்றாகக் காணப்படவில்லை. எவ்வாறெனினும் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக இந்த முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த நபர்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்திருத்தல் தொடர்பில் பரீட்சிக்கப்பட்டு உள்ளது. அதற்கு அமைய நபர்கள் பதிவு செய்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டு உள்ளமை தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் உறுதிப்படுத்தி உள்ளது. மேற்படி தகவல்கள் இணைப்பு 11 இன் ஊடாக எடுத்துக்காட்டப்பட்டு உள்ளன.

3.3. இந்த முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த நபர்கள் வெளிநாடு செல்லல் தொடர்பில் பரீட்சிப்பதற்காக அவர்களது குடிவரவு குடியகல்வுத் தரவுகளைப் பெற்றுத் தருமாறு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை மேற்படி தகவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படாமையின் காரணமாக அது தொடர்பில் அவதானிப்புக்களை முன்வைப்பதற்கு குழுவிற்கு ஆற்றல் இல்லை.

3.4. வெளிநாடு சென்றமை தொடர்பில் உறுதிப்படுத்தப்படாத நான்கு (04) நபர்களுக்காக வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருந்தமை தொடர்பில் வினவப்பட்ட போதிலும் அவர்களது குடிவரவு குடியகல்வுத் தரவுகளைப் பரீட்சிக்காது குழு அவதானிப்பு ஒன்றினை முன்வைக்க முடியாது. அவ்வாறு வெளிநாடு செல்லாமை தொடர்பில் குறிப்பிடப்படும் MOL/FE/EVP/397, MOL/FE/EVP/450, MOL/FE/EVP/539, MOL/FE/EVP/956 ஆகிய அனுமதிப்பத்திரதாரர்கள் நான்கு பேர் தொடர்பான தகவல்கள் இணைப்பு 12 இன் ஊடாக எடுத்துக்காட்டப்பட்டு உள்ளன. மேற்படி அனுமதிப்பத்திரதாரர்கள் தொடர்பில் குற்றவியல் விசாரணைகள் திணைக்களத்தின் 04 புலனாய்வுப் பிரிவுகள் ஊடாக இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரப்படும் புலனாய்விற்காக உரிய கோப்புக்களின் மூலப் பிரதிகள் மற்றும் கூற்றுக்கள் 2025.03.03 ஆம் திகதியிடப்பட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ளன.

3.5. விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் 2-IV ஆம் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த வழிமுறையின் கீழ் வழங்கப்பட்ட சகல அனுமதிப்பத்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து வாகனங்களும் 2024.09.30 ஆம் திகதிக்கு முன்னர் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தில் பதிவு செய்தல் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். இலங்கைச் சுங்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு இருந்த போதிலும் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத வாகனங்களின் தகவல்கள் இணைப்பு 13 இன் ஊடாக காட்டப்பட்டு உள்ளன. 2024.11.26 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய இந்த அறிக்கையினைத் தயாரித்து உள்ள போதிலும் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தினால் புதிய தகவல்கள் வழங்கப்பட்டவுடன் உடனடியாக இதுவரை பதிவு செய்யப்படாத இற்றைப்படுத்தப்பட்ட ஆவணங்களை முன்வைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

3.6. இலங்கை மத்திய வங்கியினால் அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடு ஒன்றிற்கு அமைய பணம் தூய்மையாக்கல் தொடர்பிலும்,வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒன்றில் ஈடுபடாமல் ஈட்டிக் கொள்ளப்பட்ட பணத்தினையும் இலங்கைக்கு அனுப்பி இந்த முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் பயன்தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்தல் தொடர்பிலும் புலனாய்வுகளை மேற்கொள்வதாக குற்றவியல் விசாரணைகள் திணைக்களம் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவிடம் அறிக்கையிடும்.

4. குழுவின் விஷேட அவதானிப்புக்கள் மற்றும் முன்மொழிவுகள்

4.1. 2024.01.25 ஆம் திகதிய மற்றும் அப/23/2522/625/018-III ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கும் முன்மொழிவுத்திட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதனை 2024.06.30 ஆம் திகதியுடன் நிறைவு செய்வதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அனுமதிப்பத்திரத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை 2024.09.30 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதிப்பத்திரதாரரினால் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தில் பதிவு செய்து பூர்த்தி செய்தல் வேண்டும். இந்த முறையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை தற்போது வரை பதிவு செய்யாமல் இருத்தல் அனுமதிப்பத்திரங்களின் நிபந்தனைகளை மீறுவதாகும். ஆதலால் இந்த நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தி மேற்படி வாகனங்களைப் பதிவு செய்யும் திகதியன்று செல்லுபடியாகும் வரி வழிமுறையின் கீழ் குறிப்பிடத்தக்க அளவிலான மேலதிக தண்டப்பணத் தொகை ஒன்றினையும் அறவிட்டு பதிவு செய்வதனை மேற்கொள்ளல் பொருத்தமானது என்பதனை குழுவாகிய நாம் முன்மொழிகின்றோம்.

4.2. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 53 (3) ஆம் பிரிவின் ஊடாக "இலங்கைக்கு வெளியே வேலைவாய்ப்பிற்காக வெளியேறிச் செல்லும் ஒவ்வொரு இலங்கையரும், அவ்வாறு வெளியேறிச் செல்லும் முன்னர் பணியகத்தில் பதிவு செய்தல் வேண்டும்" எனக் குறித்துரைக்கப்பட்டு உள்ளது. அவ்வாறே தொழில்வாய்ப்புக்களுக்காக வெளிநாடு செல்லும் மற்றும் தொழில்களைப் பூர்த்தி செய்துவிட்டு மீண்டும் வருகை தரும் நபர்களின் தகவல்களைப் பேணி வரும் பொறுப்பும் மேற்படி பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. ஆதலால் சகல அரச நிறுவனங்களிலும் வெளிநாடு சென்றுள்ள தொழிலாளி எனப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் கட்டளைகளுக்கு ஒத்தியங்கும் வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒன்றிற்காகச் செல்லும் ஒருவர் என்று மாத்திரம் கருதப்படுதல் வேண்டும் என குழுவினால் பரிந்துரை செய்யப்படுகின்றது.

ஜே.எஸ். பிரசாத் பியசேன	கே.ஏ.எஸ். ஹேமகாந்தி	சீ.பீ. வொருகலப்பத்தி	கே. நிகரில்காந்த்
தலைவர்	உறுப்பினர்	உறுப்பினர்	உறுப்பினர்